Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.894/2025

**Depositions of PW- 2**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.மரியயாக்கோபு நெப்போலியன் | Occupation | தலைமை காவலர் |
| Father’s name | அற்புதம் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of July 2026.

07.07.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மம்சாபுரம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 05.10.2024 அன்று திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் முதல்நிலை காவலராக பணியிலிருந்தபோது மல்லி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ரோந்து மேற்கொண்டபோது 15.00 மணியளவில் சாமிநத்தம் மேலூர் தெற்கு சேதுநாராயணசாமி கோவில் பின்புறம் ஒரு நபர் மதுபானங்கள் விற்பதாக எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவின்படி நாங்கள் அங்கு சென்று பார்த்தபோது எங்களை பார்த்தவுடன் ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரித்தபோது அவர் தனது கையில் பிளாஸ்டிக் பை ஒன்றை வைத்திருந்தார். அவரிடம் அதுபற்றி கேட்டபோது அரசு மதுபானக்கடையிலிருந்து மதுபானபாட்டில்களை வாங்கி விற்பனைக்காக வைத்திருப்பதாக கூறினார். அந்த இடத்திற்கு நானும் தகா.ஜெயக்கொடி மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் சைலா சொர்ணபா ஆகியோர் சென்றிருந்தோம். எதிரி அரசு அனுமதியின்றி மதுபானம் வைத்திருந்ததால் அவரை கைது செய்து அத்தாட்சி தயார் செய்து அதில் கையெழுத்து செய்ய யாரும் முன்வராததால் போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே கையெழுத்து செய்து மேற்படி

பாட்டில்களையும் எதிரியையும் காவல்நிலையம் அழைத்து வந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தோம். எதிரி மீது வழக்கு பதிவு செய்வதற்கு நான் உதவியாக இருந்தேன். என்னிடம் காட்டப்படும் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அத்தாட்சியிலுள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். சிறப்பு சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் காவல்துறையில் கடந்த 17 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த ஒரு வருடமாக மதுவிலக்கு அமலாக்க பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். எங்களுக்கு தினமும் காலையில் ரோல் கால் உண்டு என்றால் சரிதான். நாங்கள் பாக்கெட் டைரியை பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான். மேற்படி பாக்கெட் டைரியை மாதம் ஒரு முறை எனது மேல் அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும் என்றால் எனது மேல் அதிகாரி சரிபார்த்து கையெழுத்து மட்டும் செய்து கொடுப்பார். பாக்கெட் டைரியில் தினமும் எங்களுக்கு ஒதுக்கப்படும் பணிகளை குறிப்பிடுவோம் என்றால் சரிதான். மேற்படி 05.10.2024 அன்று மேற்படி இடத்திற்கு நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் மற்றும் தகா.ஜெயக்கொடி என்பவரும் சென்றோம். ஆய்வாளர் தரத்தில் உள்ள நபர்கள் யாரும் எங்களுடன் ரோந்து பணிக்கு வரவில்லை என்றால் சரிதான். மேற்படி சேதுநாராயணசாமி கோவிலானது ஊருக்கு கிழக்கு பக்கமுள்ளது. மேற்படி தெருவில் வீடுகள் நிறைய உள்ளது என்றால் சரிதான். மேற்படி இடத்தில் சிறு சிறு வீடுகள்தான் இருக்கும் என்றால் சரியல்ல பெரிய வீடுகளும் உள்ளது.

நாங்கள் மேற்படி இடத்திற்கு சென்று எதிரியை சோதனை செய்வதற்கு முன் அந்த ஊரிலிருந்த முக்கியஸ்தர்களை அழைத்தோமா என்றால் இல்லை. மேற்படி மதுபான பாட்டில்களிலிருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி பாட்டில்களை கைப்பற்றி அதனை அட்டைப்பெட்டியில் வைத்து சீல் வைத்தோமா என்றால் இல்லை. எதிரியிடம் கைப்பற்றியவாறு காவல்நிலையத்தில் ஒப்படைத்தோம். மேற்படி எதிரியிடம் கைப்பற்றியதாக கூறப்படும் இடத்தின் அருகே இருந்த நபர்களை சாட்சியாக இவ்வழக்கில் சேர்த்துள்ளோமா என்றால் அங்கிருந்தவர்கள் சாட்சியாக இருக்க முன்வரவில்லை. மேற்படி நாங்கள் அழைப்பாணை கொடுத்தும் முன்வராத நபர்களின் விவரங்கள் தெரியுமா என்றால் இல்லை. உண்மையில் மேற்படி 05.10.2024 அன்று சேதுநாராயணசாமி கோவில் அருகே சென்று எதிரியை நாங்கள் கைது

செய்யவில்லை என்றாலும் அவரிடமிருந்து மேற்படி மதுபான பாட்டில்களை கைப்பற்றவில்லை என்றாலும் அதனால் தான் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் அருகேயிருந்த தனிநபர்களையும் ஊரில் உள்ள முக்கியஸ்தர்களையும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பாட்டில்கள் எத்தனை நாட்கள் எங்கள் காவல்நிலையத்தில் இருந்தது என்றால் அதுபற்றி சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும். மேற்படி மதுபான பாட்டில்களை காவல்நிலையத்தில் வைத்து சீல் செய்தோமா என்றால் அதுபற்றி எனக்கு நியாபகமில்லை.

மேற்படி பாட்டில்களிலுள்ள ரசாயனங்கள் மதுபானங்கள் தானா என்பதை கண்டறிவதற்கு ஆய்வகத்திற்கு மேற்படி பானங்கள் அனுப்பப்பட்டதா என்றால் அதுபற்றி சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும். சம்பவயிடத்தை பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வெள்ளை நிற பையை அத்தாட்சி தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும். மேற்படி 05.10.2024 அன்று நாங்கள் ரோந்து பணிக்கு சென்றதாகவும் ஆஜர் எதிரியிடம் மதுபான பாட்டில்கள் கைப்பற்றியதாகவும் கூறப்படும் சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. எதிரி மீது ஏற்கனவே மதுவிலக்கு அமலாக்க பிரிவில் நிறைய வழக்குகள் தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் அதனால் இவ்வழக்கும் பொய்யாக புள்ளிவிவரத்திற்காக எதிரி மீது தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. நாங்கள் மேற்படி நாங்கள் கைப்பற்றியதாக கூறப்படும் 27 பாட்டில்களும் மதுபான பாட்டில்கள் இல்லை என்றால் சரியல்ல.

மேற்படி மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து சென்று மதுபானங்களை கைப்பற்றுவதற்கு நாங்கள் தகுந்த நபர்கள் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் மேற்படி மதுபான பாட்டில்களுக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. புலன் விசாரணை அதிகாரி எனது பாக்கெட் டைரியை கேட்டாரா என்றால் இல்லை. மேற்படி நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எதிரி மீது பொய்யாக இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்து எதிரிமீது பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.